## நீங்கள் ஆலோசனைக்குச் செல்லாவிட்டால் என்ன நடக்கும்?

ஆலோசனைக்குச் செல்லாதிருப்பது ஆலோசனை ஆணையை மீறுதலாகும். நீதிமன்ற அவமதிப்பாக கருதப்பட்டு, சட்டப்படி தண்டனை விதிக்கப்படும்.



சுயப் பாதுகாப்பு ஆணை பற்றி விவரமறிய, அன்புகூர்ந்து குடும்பப் பாதுகாப்பு நிலையத்தை (குடும்ப நீதிமன்றங்கள்) அழையுங்கள்

தொலைபேசி: **6435 5077**

குடும்ப நீதிமன்றங்கள் 1-ன் ஆலோசனை மறுஆய்வு தேதியை மாற்ற, அன்புகூர்ந்து உங்களது சிங்பாஸ் மறைச்சொல்லைப் பயன்படுத்தி **https://ifams.gov.sg** குடும்ப விண்ணப்பங்களை ஒருங்கிணைத்து நிர்வகிக்கும் செயல்முறையின்மூலம் (iFAMS) ஆலோசனை மறுஆய்வு தேதியை மாற்றுவதற்கு விண்ணப்பம் செய்யுங்கள்.

மாறாக, உங்களது வழக்கு குறிப்பெண், அடையாள அட்டை எண், காரணம்(கள்) ஆகிய விவரங்களுடன் ஆதாரப் பத்திரங்களை இணைத்து, **FJCOURTS_MAINTPOS@FJCourts.gov.sg** முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம். எடுத்துக்காட்டாக, நீதிமன்றத்திற்குச் செல்வதிலிருந்து விலக்களிக்கும் செல்லுபடியாகும் மருத்துவச் சான்றிதழ்.

நியமிக்கப்பட்ட அமைப்புகளில் நீங்கள் செல்லவேண்டிய ஆலோசனை அங்கங்களின் விவரமறிய, அன்புகூர்ந்து சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சை அழையுங்கள்

தொலைபேசி: **6354 8264**

MSF MINISTRY OF SOCIAL AND FAMILY DEVELOPMENT

FAMILY JUSTICE COURTS
SINGAPORE

# கட்டாய ஆலோசனைத் திட்டம்



# கட்டாய ஆலோசனைத் திட்டம் என்பது என்ன?

கட்டாய ஆலோசனைத் திட்டம் என்பது, குடும்ப வன்முறை அனுபவித்தவர்கள் அல்லது பயன்படுத்தியவர்களுக்கு உதவ, நீதிமன்றம் வழங்கும் ஆணையாகும். சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சு இத்திட்டத்தை நிர்வகிக்கிறது. பின்வரும் நடவடிக்கைகளின்மூலம் குடும்பங்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பது திட்டத்தின் இலக்கு:

- சர்ச்சைகளுக்குத் தீர்வு காண்பதற்காக அதிக மரியாதையான நடத்தைகளைக் கற்றுக்கொள்ள குடும்ப உறுப்பினர்களுக்கு உதவுதல்; மற்றும்
- அனைவரது பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்குத் தேவையான ஆதரவையும் திறன்களையும் குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்குதல்.

# ஆலோசனை ஆணை என்பது என்ன?

ஆலோசனை ஆணை என்பது, மாதர் சாசனம் 65 பிரிவின்படி நீதிமன்றம் வழங்கும் பாதுகாப்பு ஆணையோடு சேர்ந்து உத்தரவிடப்படக்கூடிய ஆணையாகும். உங்கள் பெயர், ஆலோசனை ஆணையில் குறிப்பிட்டிருந்தால் நீங்கள் நியமிக்கப்பட்ட ஒரு சமூகச் சேவை அமைப்பில் ஆலோசனைத் திட்டத்திற்குக் கட்டாயம் செல்ல வேண்டும்.

# ஆலோசனைக்குச் செல்ல யாருக்கெல்லாம் ஆணை பிறப்பிக்கப்படலாம்?

பாதுகாப்பு ஆணைக்கு விண்ணப்பம் செய்பவர் ("புகாரளிப்பவர்" எனப்படுபவர்), எவருக்கு எதிராகப் பாதுகாப்பு ஆணை பிறப்பிக்கப்படுகிறதோ அவர் ("எதிர்வாதி" எனப்படுபவர்), குடும்ப உறுப்பினர்கள் ஆகியோர் கட்டாய ஆலோசனைக்குச் செல்ல ஆணை பிறப்பிக்கப்படலாம்.

மாதர் சாசனத்தின்படி, குடும்ப உறுப்பினர்களில் உள்ளடங்குவோர்:

- கணவன், மனைவி அல்லது முன்னாள் கணவன், மனைவி;
- பிள்ளை, தத்துப் பிள்ளை அல்லது மாற்றான் பிள்ளை உட்பட;
- பெற்றோர் அல்லது மாமனார், மாமியார்;
- உடன்பிறப்பு; அல்லது
- குடும்ப உறுப்பினராக நீதிமன்றம் கருதும் மற்ற உறவினர்கள் அல்லது உடற்குறை உள்ளவர்கள்.

# கட்டாய ஆலோசனைக்குச் செல்லுமாறு உங்களுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டால் என்ன நடக்கும்?

## செயல் 1: ஆலோசனை ஆணை பிறப்பிக்கப்படுதல்

குடும்ப நீதிமன்றங்கள் பாதுகாப்பு ஆணையுடன் ஆலோசனை ஆணையையும் பிறப்பிக்கும். பிறகு, பின்வருபவற்றை நீதிமன்றம் உங்களிடம் தெரியப்படுத்தும்:

- ஆலோசனையின் நோக்கங்கள்;
- ஆலோசனைக்குச் செல்லாதிருப்பதன் விளைவுகள்; மற்றும்
- நீதிமன்ற மறுஆய்வுக்காக நீங்கள் நீதிமன்றத்திற்குத் திரும்பி வரவேண்டிய தேதி மற்றும் நேரம்.

## செயல் 2: ஆலோசனை அமைப்புகள்

உங்களுடைய முதல் ஆலோசனைப்பெறும் தேதி, நேரம், இடம் ஆகியவற்றை திட்டமிட, சமூகச் சேவை அமைப்பைச் சார்ந்த ஒரு ஆலோசகர் உங்களைத் தொடர்புக்கொள்வார். முதல் சில அங்கங்களின்போது, உங்களது குடும்பச் சூழ்நிலையை நன்கு புரிந்து கொள்வதற்காக ஆலோசகர் உங்களைப் பேட்டி காணக்கூடும்.

ஆலோசனைச் சந்திப்புகளை எத்தனை முறை நடத்துவது, சந்திப்புக்கான இடைவேளைக் காலம் ஆகியவற்றை திட்டமிட உங்கள் ஆலோசகர் உங்களிடம் கலந்துப் பேசுவார். இன்னும் தீர்வுக்காண வேண்டிய வன்முறைப் பிரிச்சனைகள் இருந்தாலோ, ஆலோசனை ஆணை நடப்பில் இருந்தாலோ இத்திட்டம் தொடரக்கூடும்.

ஆலோசனை அமைப்புகள் உங்களுடன், மற்ற தரப்பினருடன் அல்லது உங்களைப் போன்ற அதே அனுபவமுள்ள மற்றவர்களுடன் குழுக்களாக நடத்தப்படலாம். உங்களுக்குப் பொருத்தமானதாக ஆலோசகர் தேர்ந்தெடுக்கும் அங்கத்தில் நீங்கள் கலந்து கொள்வீர்கள். பின்வருபவற்றை நீங்கள் புரிந்துகொள்ள ஆலோசனை உதவும்:

- குடும்ப வன்முறை என்பது என்ன;
- வன்முறையால் உங்கள் குடும்பத்திற்கு ஏற்படும் பாதிப்பு;
- பாதுகாப்பாக இருக்க எப்படி திட்டமிடுவது;
- உங்கள் குடும்பத்தைப் பாதுகாப்பாக வைத்திருக்க திறன்களை வளர்த்துக்கொள்வது எப்படி; மற்றும்
- உங்களுக்குக் கிடைக்கக்கூடிய சமூக வளங்கள்.

குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட மற்ற குடும்ப உறுப்பினர்களுக்கு ஆலோசனை அவசியமா என்பதையும் ஆலோசகர் மதிப்பிட்டு, அவர்கள் பாதிப்பைச் சமாளிக்க உதவும் சேவைகளைப் பற்றி கலந்து பேசுவார்.

## செயல் 3: நீதிமன்ற மறுஆய்வு

உங்களது நீதிமன்ற மறுஆய்வுக்கான தேதியிலும் நேரத்திலும் நீங்கள் குடும்ப நீதிமன்றத்திற்குத் திரும்பிச் செல்வீர்கள் (செயல் 1 பார்க்கவும்). உங்களது ஆலோசகர் சமர்ப்பித்த அறிக்கையையும் தேவையான மற்ற விவரங்களையும் கொண்டு, ஆலோசனையின் துணையுடன் நீங்கள் அடைந்துள்ள முன்னேற்றத்தை நீதிபதி பரிசீலிப்பார். நீங்கள் இரண்டாவது நீதிமன்ற மறுஆய்வுக்குத் திரும்பி வரவேண்டும் என நீதிபதி உத்தரவிடக்கூடும்.

நீதிமன்ற மறுஆய்வுக்குப் பிறகு, சமூகச் சேவை அமைப்பில் ஆலோசனை தொடரக்கூடும். ஆலோசனையின் முடிவில், ஆலோசகர் அறிக்கையைக் குடும்ப நீதிமன்றத்திற்கும் சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சுக்கும், அனுப்பி வைப்பார். ஆலோசனையால் முன்னேற்றம் ஏற்பட்டிருந்தால், ஆலோசனையிலிருந்து உங்களை விடுவிக்குமாறு பரிந்துரைக்கப்படும்.

